விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 268 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை (13.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே



## ஐ.நா கூட்டத்தொடர் நேற்று ஆரம்பம்

03ஆம் பக்கம் பார்க்க

## 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்

### ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தல்

(ஜெனிவா)

- பொருளாதார மீட்சிக்கு அதிகாரப் பகிர்வும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் தேவை.
- தமிழர்கள் நீதி, சமாதானம், சமத்துவம், கண்ணியத்துடன் வாழ்வதை உறுதி செய்ய வேண்டும்.
- மாகாண சபைக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதோடு தேர்தலையும் விரைவாக நடத்த வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் மனித உரிமை நிலைவரத்தை பெரிதுபடுத்தாதீர்

### ஐ.நாவில் ரஷ்யா பகிரங்கம்

(ஜெனிவா)

இலங்கையின் மனித உரிமை நிலைவரத்தை பெரிது படுத்த வேண்டாம் என ஐ.நாவில் ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஐ.நா கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது.

11

# இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற
# மனித உரிமை மீறல்களுக்கு
# பொறுப்புக்கூற வேண்டும்

## ஐ.நாவில் பதில் ஆணையாளர் நடா அல் நஷிப்




*(ஜெனிவா)*

- இலங்கையின் பாதுகாப்புத்துறையில் ஆழமான சீர்திருத்தம் அவசியம்.
- வழங்கிய வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன.
- இலங்கையின் நிலைமை பலவீனமாக உள்ளது.
- வடக்கு - கிழக்கில் இராணுவ மயமாக்கல் (02ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா தீர்மானத்தை நிராகரிக்கின்றோம்

### ஜெனிவாவில் அமைச்சர் அலி சப்ரி




(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள 46/1 தீர்மானம் இலங்கையின் இறையாண்மையை மீறும் வகையில் அமைந்துள்ளமையினால் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் அதனை நிராகரிப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் அலிசப்ரி இதனைத் தெரிவித்தார்.

02

## பயங்கரவாத சட்டத்தை இடைநிறுத்துங்கள்

### ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் கோரிக்கை

(ஜெனிவா)

சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு முழுமையாக இணங்கும் வரை பயங்கரவாதத் தடைச் சட்

11

## இலங்கைக்கு உதவ தயாராக இருக்கின்றோம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி ரணிலிடம் நேரில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலையில் இருந்து மீள பல்வேறு துறைகளின் ஊடாக உதவிகளை வழங்க

11

## வடமராட்சியில் வாள்வெட்டு

### இருவர் படுகாயம்

(கரணவாய்)

தனியார் பேருந்தில் வந்த இருவரை மூவர் வழிமறித்து வாளால் வெட்டிய சம்பவமொன்று நேற்றிரவு வடமராட்சி பகுதி

02

## இலங்கை நிலைவரம்

### மேற்குலக நாடுகள் ஐ.நாவில் கவலை வெளியீடு

(ஜெனிவா)

தற்போது நிலவும் நெருக்கடியானது இலங்கையில் மனித உரிமைகள் மேலும் சீர்குலைவதற்கு வழிவகுக்கும் என்று கனடா கவலை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக நாட்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அர்த்தமுள்ள நடவடிக்கை வேண்டும்

## ஐ. நாவில் ஜப்பான் அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

சட்டத்தின் ஆட்சி, நீதி மற்றும் சுதந்திரம் ஆகியவை ஜனநாயக அமைப்புகளின் முக்கிய தூண்கள் என இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இலங்கையில் நீண்டகாலமாக நிலவி வரும் தண்டனையின்மை மற்றும் ஊழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் பேசிய அமெரிக்க பிரதிநிதி, ஒரு முக்கிய நடவடிக்கையாக இவற்றுக்கு தீர்வை காணவேண்டும் என கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் பயங்கரவாத தடை சட்டங்களில் முன்மொழியப்பட்ட மாற்றங்களை ஏற்றுக்கொண்டு தாம் வரவேற்பதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

ஆனால், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் ஜப்பான் வலியுறுத்தியுள்ளது. (ம)

# இலங்கையில் 6.3 மில்லியன் மக்களின் நிலைமை மோசமடையும்

## உலக உணவுத்திட்ட அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என்றும் போதுமான உயிர் காக்கும் உதவி மற்றும் வாழ்வாதார ஆதரவு வழங்கப்படாவிட்டால் அவர்களின் நிலைமை மோசமடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் ஆகிய்வை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான இரண்டு பருவங்களில் மோசமான அறுவடை காரணமாக உற்பத்தியில் கிட்டத்தட்ட 50 சதவீத வீழ்ச்சிக்கு வழிவகுத்ததாகவும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் காரணமாக உணவு தானியங்களின் இறக்குமதி குறைக்கப்பட்டதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

உடனடி உணவு உதவி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் உட்பட குடும்பங்களுக்கு போஷக்குள்ள உணவை வழங்குவது முக்கியமானது என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பு மேலும் மோசமடைவ தைத் தடுக்கவும் விவசாய உற் பத்தியை மீட்டெடுப்பதற்கும், சிறு விவ சாயிகளை இலக்காகக் கொண்ட வாழ்வாதார உதவிகள் அவ சியம் என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

60 சதவீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் குறைவாகவே உணவு உண்பதுடன், மலிவான மற்றும் குறைந்த போஷாக்குள்ள உணவை உட்கொள்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட பாதிக்கப்படக்கூடிய மற்றும் விழிம்பு நிலை சமூகங்களுக்கு உணவு அல்லது பண அடிப்படையிலான உதவிகளை வழங்க வேண்டும் என்று இரு அமைப்புகளும் பரிந்துரைத்துள்ளன.

மேலும், விவசாயத்துக்கு தேவையான உரங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்களை வழங்கி அவர்களின் போஷாக்கு நிலையை மேம்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## ஐ. நா தீர்மானத்...

மேலும் பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக சர்வதேச விதிமுறைகளுக்கு ஏற்றவாறு தேசிய பாதுகாப்பு சட்டம் பதிலீடு செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையின் மறுசீரமைப்பு பொறுப்பு கூறல், மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல், தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை நேற்றைய தினம் ஐக்கிய நாடுகள் மனித பேரவையின் 51 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் தேசிய நேரத்திற்கு அமைய 12.30 அளவில் அமர்வு ஆரம்பமாகியதுடன், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளர் நடா அல் நஷீப் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

இதன்போது சபையில் உரையாற்றுகையில் 46/1 தீர்மானம் இலங்கையின் இறையாண்மையை மீறுவதாக அமைந்துள்ளதென அலி சப்ரி குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்பட்டுள்ள 46/1 பிரேரணை கடந்த வருடம் மார்ச் மாதம் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 22 நாடுகளும் எதிராக 11 நாடுகளும் வாக்களித்திருந்ததோடு, 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொண்டிருக்கவில்லை. (ம)

## மனித உரிமை...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் இலங்கை தொடர்யான அறிக்கையை சமர்ப்பித்து பேசும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆழமான, ஜனநாயக மற்றும் பாதுகாப்பு சீர்திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமை தொடர்பாக கவலை வெளியிட்ட அவர், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தப்போவதில்லை என அரசாங்கம் வழங்கிய வாக்குறுதியை மீறியமை குறித்தும் சுட்டிக்காட்டினார்.

யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள போதும் காணாமல்போனவர்கள் உறவினர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சமூக செயற்பாட்டாளர்கள், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், மாணவர்கள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலை புலிகள் உறுப்பினர்கள் மீதான கண்காணிப்பு நடவடிக்கை குறித்தும் அவர் கவலை வெளியிட்டார்.

அத்தோடு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக நீதியை நிலைநாட்டாமை, வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் நடவடிக்கை மற்றும் காணி அபகரிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கும் அவர் கண்டனம் வெளியிட்டார். (ம)

## வடமராட்சியில்...

யில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அல்வாய் பகுதியைச் சேர்ந்த சுமார் 55 வயது மதிக்கத்தக்க கணவன் மற்றும் மனைவியே வாள்வெட்டுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனியார் பேருந்தில் பயணிகளுடன் குறித்த இருவரும் பயணம் செய்த போது திடீரென வாளுடன் வந்த மூவர் தனியார் பேருந்தை வழிமறித்து பயணித்த இருவரை வாளினால் தாக்கினர். இதனால் பயணிகள் தனியார் பேருந்தை விட்டு ஓடினர். இதனால் பதற்றமான சூழ்நிலை சில நிமிடங்கள் நீடித்தன. அதன் பின்னர் மூவரும் அங்கிருந்து சென்ற போது, இருவரையும் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-60)




1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**க. பிலேந்திரன்**

( திரவியம் )

பிறப்பு 27.06.1934

இறப்பு 13.09.2021

ஆண்டொன்று மறைந்து விட்டாலும்
அகலாது உங்கள் பிரிவு தந்த சோகம்
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறாதய்யா எங்கள் உள்ளம்
அன்புத் தந்தையாய் பாசத்தின் இலக்கணமாய்
அன்பும் அரவணைப்பும் தந்து எமை வளர்த்து
ஆறாத்துயரில் எம்மை தவிக்க விட்டுச் சென்றதேனோ
உங்கள் இழப்பை எதனாலும் ஈடுசெய்ய இயலாது
உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு
என்றும் நீங்காது
உங்கள் ஆன்மா இறைவனடி சேர்ந்திட
வேண்டுகின்றோம்

இரண்டாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

077 850 2992

(12756)

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)

076 835 1932 / 021 223 2222

வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242
Laufen, Swiss
Tel: 0041768185443 | 0041615544242

(12737)

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு வேலை பழகிய அல்லது பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

த. சாங்கரப்பிள்ளை அன்சன்ஸ்
225c மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

021 221 5397

(C-4901)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஜெனிவாவில் ஆர்ப்பாட்டம்

(ஜெனிவா)

**இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து ஜெனிவாவில் இலங்கையர்கள் சிலர் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**







பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் மூலம் போராட்டக்காரர்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்கு முறையை முடிவுக்குக் கொண்டு வருமாறு வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களின்போது கைதுசெய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுவிக்குமாறு இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

## நுகர்வோரை ஏமாற்றும் உற்பத்தியாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களை குறைந்த நிறையில் உற்பத்தி செய்து ஏமாற்றும் மோசடி வர்த்தகம் தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

பிஸ்கட், சவர்க்காரம் பற்பசை, மிளகாய்த்தூள், மசாலா தூள் போன்ற பொருட்களில் இந்த மோசடி இடம்பெறுவதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

எடையைப் பொருட்படுத்தாமல் விலை குறைவாக இருப்பதாக நினைத்து கொள்வனவு செய்வோர் பணத்தை இழக்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில உற்பத்தியாளர்கள் இந்தப் பொருட்களை சலுகை என்று விளம்பரம் செய்து குறைந்த விலையில் விற்பனை செய்வதாகவும் ஆனால் சாதாரண விலையுடன் ஒப்பிடுகையில், அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சில வகையான பிஸ்கட்கள் 50, 60, 70 கிராம் போன்ற சிறிய பக்கெட்டுகளில் தயாரிக்கப்பட்டு, விலை குறைவு என்ற போலிக்காரணத்தில் சந்தையில் வெளியிடப்பட்டு, நுகர்வோருக்கு நன்மை பயக்கும் என உற்பத்தியாளர்கள் விளம்பரம் செய்கின்றனர்.

நுகர்வோரை ஏமாற்றி சவர்க்காரம், மிளகாய் போன்ற மசாலாப் பொதிகளை விற்பனை செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## ஐ.நா கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமானது

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வு நேற்று திங்கட்கிழமை சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வின் ஆரம்பமாக மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் நினைவாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நேற்று தொடங்கிய இந்த அமர்வு ஒக்டோபர் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (நி)

## உலக வங்கி ஆதரவில் முன்பள்ளி சிறுவர்களுக்கு மதிய உணவு

(கொழும்பு)

உலக வங்கியின் ஆதரவின் கீழ் முன்பள்ளி பிள்ளைகளுக்கான பகல் உணவு வழங்கும் நடவடிக்கை இந்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் தெரிவித்துள்ளது.

போஷாக்கு குறைபாடுள்ள பகுதிகளில் வாழும் 1 இலட்சத்து 55 ஆயிரம் சிறார்களுக்கு இந்த மதிய உணவு வழங்கப்படவுள்ளதாக அதன் பணிப்பாளர் நயன எஸ்.பி. கே.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது 90 ஆயிரம் போஷாக்கு குறைபாடுள்ள முன்பள்ளி சிறார்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதுடன், அதற்காக விநியோகஸ்த்தர்களுக்கு தலா உணவு ஒன்றுக்கு 30 ரூபாய் வழங்கப்படுகின்றது.

எனினும், அந்தத் தொகை போதாது என்பதால் அதனை 60 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கான பணம் உலக வங்கியின் உதவியின் கீழ் வழங்கப்படவுள்ளது.

இந்த மாதம் முதல் காலை உணவுக்குப் பதிலாக தற்போதைய செய்முறையை திருத்தி மதிய உணவாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

## கர்ப்பிணிகளுக்கான சத்துணவு மீண்டும் விநியோகம்

(கொழும்பு)

இலங்கையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவுப் பொதி விநியோகத் திட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது.


12 வாரங்கள் நிறைவடைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 10 மாத காலத்திற்கு தலா 2 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் உணவுப் பொருட்கள் சீராக கிடைக்காததால் கடந்த ஜூன் மாதம் முதல் இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும், தற்போது பல மாவட்டங்களில் மீண்டும் போஷாக்கு பொதிகள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களில் நாடளாவிய ரீதியில் விநியோகம் மீள ஆரம்பிக்கப்படும் எனவும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

## நாட்டை வந்தடைந்தார் மார்ட்டின் சுன்கொங்



(கொழும்பு)

அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங் நாட்டை வந்தடைந்துள்ளார்.

துபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான ஈ.கே 652 என்ற விமானத்தில் நேற்று முந்தினம் அவர் நாட்டை வந்தடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது விடுத்த அழைப்பிற்கு அமைய அவரது இந்த விஜயம் அமைந்துள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை சரிவு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் கடந்த 7 மாதங்களில் இல்லாத அளவு கச்சா எண்ணெய் விலை சரிவடைந்துள்ளது.

சீனாவில் அமுல் செய்யப்பட்டுள்ள கொவிட் கட்டுப்பாடுகள் மற்றும் அமெரிக்கா, ஐரோப்பாவில் மேலும் வட்டி விகித உயர்வுக்கான சாத்தியக்கூறுகள் ஆகிய காரணிகளால் எரிபொருள் நுகர்வு குறைந்துள்ளதை அடுத்து கச்சா எண்ணெய் விலையில் நேற்று மேலும் சரிவு ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டப் போட்டி

# தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது

## 17 வயதிற்குட்பட்ட பிரிவில்...

வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை நகுலேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதியது. இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி வீராங்கனை லயன்ஷிகா 3 கோல்களை பதிவு செய்தார். இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் போராடிய போதிலும் மேலதிக கோல்களைப் பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் தெல்லிப்பழை மகா ஜனாக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை நகுலேஸ்வரா வித்தியால்ய அணி பெற்றுக் கொண்டது. (நி-90)




## 20 வயதிற்குட்பட்ட பிரிவில்...




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி கோல் மழை பொழிந்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை நகுலேஸ்வரா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து புங்குடுதீவு மத்திய கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி வீராங்கனைகளான கிருஷாந்தி 3 கோல்களையும் யோகிதா ஒரு கோலையும் போட்டு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி வீராங்கனைகளான கிருஷாந்தி 2 கோல்களையும் யதுஷா ஒரு கோலையும் போட ஆட்ட நேர முடிவில் தெல்லிப் பளை மகாஜனாக் கல்லூரி அணி 7:0 என்ற கோல் கணக்கில் 'வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3 ஆம் இடத்தை புங்குடுதீவு சிறிய புஸ்பம் கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி பெற்றது. (நி-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2697

### விதுரன்

எப்படி வாழ்வான் பார்க்கலாம் என்பவர்களுக்கு மத்தியில் இப்படித்தான் வளர்ந்தேன் என்று வாழ்ந்து காட்டுங்கள்.

### பாவ்னி



உங்களை தள்ளி விடுவதில் மற்றவர்கள் வலிமையானவர்கள் என நிரூபித்தால், கீழே விழுந்தாலும் எழுந்து நிற்பதில் நீங்கள் வலிமையானவர்கள் என நிரூபியுங்கள்.

### பவித்திரா




### சந்தோஷ்



வயசு பொண்ணு ஒண்ணு நம்மள தமிழ்ல மாமான்னு கூப்பிட்டா சந்தோஷமா இருக்கு அதுவே இங்கிலீஸ்ல அங்கிள் என்று கூப்பிட்டா கடுப்பாகுதே

### கீர்த்தனா

அவமானத்துக்கு இரண்டு குணங்கள் உள்ளன

கோழையை தற்கொலை செய்ய வைக்கிறது

வீரனை வாழ்ந்து காட்ட வைக்கிறது

### ராஜினி



வெட்டிய மரத்தை கோடரி மறக்கலாம். வெட்டுப்பட்ட மரம் ஒருபோதும் மறப்பதில்லை.
-ஆபிரிக்க பழமொழி-

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல்-2022

(யாழ்ப்பாணம்).

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குப்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி இன்று 13 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு R.C பாடசாலை நாவலர் வீதி, மு.ப 11 மணிக்கு ஆசாத் வீதி, பி.ப 2.30மணிக்கு 1 ஆம் 2ஆம் 3ஆம் குறுக்குத்தெரு நாவலர் வீதி, 14 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு சேமக்காலை வீதி கெனடி வீதி, மு.ப 11 மணிக்கு ஜின்னா வீதி, பி.ப 2.30 மணிக்கு சனசமூக நிலையம், வசந்தபுரம் 15 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு சன சமூக நிலையம் சூரியஒளி, மு.ப 11மணிக்கு சனசமூக நிலையம் சென் நீக்கிலாஸ், பி.ப 2.30 மணிக்கு கோவில் ஒழுங்கை நாவாந்துறை, 16 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு காதி அபூக்கர் வீதி நாவாந் துறை மு.ப 11 மணிக்கு சனசமூக நிலையம் கண்ணாபுரம், பி.ப 2.30 மணிக்கு கற்குளம் நாவாந்துறை வெள்ளாந் தெரு நாவாந்துறை,17 ஆம் திகதி மு.ப 9 மணிக்கு சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி சந்தி, மு.ப 11 மணிக்கு கோணந் தோட்டம், பி.ப 2.30 மணிக்கு சோலைபுரம் ஆகிய இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப் பூசியை பெற்றுக் கொள்ளுமாறும் ஒரு நாய்க்கான உரிமம்கட்டணமான 50 ரூபாய் அறவிடப்படும் எனவும் யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)



முன்னாள் யாழ். மாநகர முதல்வர் அமரர் பொன். சிவபாலனின் 24 ஆவது நினைவு தினம் சித்தங்கேணியில் அவரது இல்லத்தில் உணர்வுபூர்வமாக நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

# மந்துவிலில் கைக்குண்டு மீட்பு

(சாவகச்சேரி)


கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் கிழக்கு பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணி துப்புரவு பணியின் போது குறித்த கைக்குண்டு அவதானிக்கப்பட்ட நிலையில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு கைக் குண்டினை அப்புறப்படுத்துவதற்



கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (4-30)

# கட்டுப்பாட்டினை இழந்த கார் கடையுடன் மோதி தடம்புரண்டது



(சாவகச்சேரி)

கொடிகாமம் நகர்ப்பகுதியில் ஏ9 வீதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் கார் ஒன்று கட்டுப்பாட்டினை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்த கார் கொடிகாமம் பகுதியில் கட்டுப்பாட்டினை இழந்து வீதி ஓரம் காணப்பட்ட ரயர் கடையுடன் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இருப்பினும் குறித்த விபத்தில் கார், கடை ஆகியன பகுதியளவில் சேதமடைந்துள்ள போதிலும் காரில் பயணித்தவர்கள் காயங்கள் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

30 • 06 • 1929



மறைவு

03 • 09 • 2022

## அமரர். செல்லத்துரை இரட்ணப்பிரகாசம்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மூத்த பழைய மாணவர்களுள் ஒருவரான **திரு.செல்லத்துரை இரட்ணப்பிரகாசம்** இறைபதமடைந்த செய்தி எம் யாவரையும் ஆழ்ந்த துயருக்கு உள்ளாக்கியுள்ளது. அமரர் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் செயலாளராக 1949 முதல் 1959 வரை செயற்பட்டதுடன் 1994 முதல் மூத்த உபதலைவராகவும் செயற்பட்டு வந்துள்ளார். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வைர விழா மலரின் (1944-2004) நூலாசிரியராகவும் விளங்கியவர்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

(C-4900)

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.


# இராசிபலன்

13.09.2022
ஆவணி 28, செவ்வாய்க்கிழமை
துதியை பிற்பகல் 1.34 மணிவரை
ரேவதி முற்பகல் 10.07 மணிவரை

சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம் 3.03-4.33 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
உத்தரம்

வளவன்

**மேஷம்**: வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**கடகம்**: திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்**: சுற்றத்தினர் வருகையால் சுகம் காணும் நாள்,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**: வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**ரிஷபம்**: தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேவையற்ற சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்**: சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளித்து விடுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**விருச்சிகம்**: இல்லத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதல் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: சமுதாயப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி**: எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**தனுசு**: அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், வீட்டை பராமரிக்கும் எண்ணம் அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்**: மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

உன்னையே நீ நம்பாத வரை யாரையும் நீ நம்பப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலுள்ள கைதிகளுக்கு ஆதரவாக உறவுகள் யாழில் உணவு தவிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

**கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களினுடைய உறவினர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று காலை முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.**



கடந்த 2019,2020 ஆகிய காலப்பகுதிகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 13 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மகசின் சிறைச்சாலையில் செப்டெம்பர் 06 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அவர்களுக்கு ஆதரவாக இளைஞர்களினுடைய உறவினர்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் உறவுகளை விடுதலை செய், சிறுபிள்ளைகளின் எதிர்காலத்தை சிறையில் சிதைத்து விடாதே, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு போன்ற வாசகங்களடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர். (4-33-104)

# வேறுபடும் பேருந்துக் கட்டணங்கள் விரைவில் உரிய நடவடிக்கை

## வடமாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபை

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக பேருந்துகளில் அதிகரித்த பேருந்துக் கட்டணம் அறவிடல், பயணிக்கான பற்றுச்சீட்டை வழங்காமை தொடர்பில் அதிகளவிலான முறைப்பாடுகள் ஆளுநர் செயலகத்திற்கும் பிரதம செயலாளருக்கும் மாகாண அமைச்சுக்கள், மாவட்ட செயலாளர்கள், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கும் கிடைக்கப் பெற்றுள்ளதாக வடமாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

பேருந்துகளில் பயணிகளுக்கான பற்றுச்சீட்டுகள் வழங்குவது கட்டாயமானதாகும். வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் திடீர் பரிசோதனை அதிகாரிகள் மூலம் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதனை மீறும் பேருந்து உரிமையாளர்களுக்கு அதிகார சபையின் நியதிச் சட்டத்தின்படியான தண்டப்பண அறவீடு மற்றும் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சில வழித் தடங்களில் கட்டண அறிவீடுகளில் முரண்பாடுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு அவற்றை சீராக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதுவரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் இறுதியாக தயாரித்து வெளியிடப்பட்ட கட்டண விபரங்களே அமுலில் இருக்கும் என வடமாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் சு. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (நி)

# யோகக்கலை கற்கைநெறி புதிய பிரிவு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டிற்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 24 ஆம் திகதி கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமு[illegible]ங்களிலும் காலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெறும். இவ் வகுப்புக்களில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களை கொண்டமைந்த இவ் அடிப்படை கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களிற்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப் பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயில விரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமா அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சாவகச்சேரியில் சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மருத்துவமனையில் கடமையாற்றும் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியைச்சேர்ந்த 48 வயதான பெண் உத்தியோகத்தர் ஒருவருடைய துவிச்சக்கரவண்டியே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

காலையில் துவிச்சக்கரவண்டியை சந்தை வளாகத்தில் தரித்து விட்டு பேருந்தில் கிளிநொச்சி சென்று மீண்டும் மாலை சாவகச்சேரிக்கு வந்த போதே துவிச்சக்கரவண்டி திருடப்பட்டிருப்பதனை அறிந்த பாதிக்கப்பட்ட பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். கடந்த வாரமும் சாவகச்சேரி சந்தை வளாகத்திற்குள் பாடசாலை மாணவன் ஒருவரின் துவிச்சக்கரவண்டி திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது(நி-30)

# கையெழுத்து திரட்டும் நடவடிக்கை 3 ஆவது நாளாக வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்திவழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் மூன்றாவது நாளாகவும் நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது.

வல்லை முனியப்பர் கோவில் முன்பாக தேங்காய் உடைத்து ஊர்திவழி கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரசார நடவடிக்கையின் மூன்றாவது நாள் வடமராட்சி பகுதிகளில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (4-33-104-60)

# தொடரும் கைதிகளின் போராட்டம் உடல்நிலை கவலைக்கிடம்

## காப்பாற்றுமாறு உறவுகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 13 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 6 ஆம் திகதியிலிருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை தொடங்கியிருந்தனர்.

கைதிகளின் கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காததால் போராட்டம் ஒரு வார காலமாக தொடருகிறது. இதனால் குறித்த கைதிகளின் உடல்நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அவர்களை காப்பாற்றுமாறும் கைதிகளின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தம்மை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2019 - 2020 ஆகிய காலப்பகுதிகளின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களான உ.உமாகாந்தன், ர.சயந்தன், வி.இன்பராஜ், ம.பார்த்தீபன், செ.உதயசிவம், பா. நகுலேஸ்வரன், சி.சிவாகரன், வே.சதீஸ்குமார், ச.சயிலன், இ.விவேகானந்தன், யோ.டட்லி, லூ.அயந்தன், யோ.அயந்தன் ஆகியோரே மேற்படி உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

குறித்த கைதிகளின் சட்டத்தரணிகள் சட்டமா அதிபருடன் கதைத்து கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்ற முயற்சி எடுத்து தமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும் எனவும் அரசியல் தலைவர்கள் இதற்கு உதவ வேண்டும் எனவும் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 320 |
| உருளைக்கிழங்கு | 280 | 270 | 300 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 400 |
| தக்காளி | 250 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 200 |
| கோவா | 450 | 450 | 400 |
| கரட் | 300 | 400 | 450 |
| பூசணி | 130 | 150 | 200 |
| புடோல் | 120 | 140 | 120 |
| வாழைக்காய் | 200 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 1000 |
| வெண்டக்காய் | 180 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 350 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 180 | 160 | 250 |
| கறிமிளகாய் | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | — | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 65-70 | 60-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | — | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 280 |
| பொன்னாங்காணி | 80 | — | 60 |
| வல்லாரை | 25 | — | 50 |
| ஈரப்பலா | 80 | — | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்தை முட்டாளாக்கும் இலங்கை அரசாங்கம்

## உலகத் தமிழர் பேரவை

**(கொழும்பு)**

**இலங்கையில், யுத்தம் முடிவடைந்து 13 வருடங்கள் கடந்துள்ள நிலையில், உள்ளூர் பொறிமுறை என கூறி பாதிக்கப் பட்டவர்களை மற்றும் சர்வதேச சமூகத்தை இலங்கை அரசாங் கங்கள் முட்டாளாக்கியுள்ளன என்று உலக தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறியமைக்கான விசாரணை, சாட்சியங்களை சேகரித்தல், பொறுப்புக்கூறல், நீதி வழங்கு தல் ஆகிய அனைத்து நடவ டிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என உலக தமிழர் பேரவை வலியுறுத்தல் விடுத் துள்ளது.

மேலும் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிப் பதற்கும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதற்கும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்குவதற்குமான ஒரு சர்வதேச பொறி முறையை வலியுறுத்தவுள் ளதாகவும் தெரிவித்துள் ளது. (ந)

# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க கோரிக்கை

## விமல் வீரவன்ச கல்வி அமைச்சருக்கு கடிதம்



(கொழும்பு)

இவ்வருடம் நடைபெறவுள்ள உயர் தரப் பரீட்சையை 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை ஒத்தி வைக்கு மாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் நீண்ட கால மாக பாடசாலைகள் மூடல், சுமார் நூறு நாட்களாக ஆசிரியர்களின் வேலை நிறுத்தம், எரிபொருள் நெருக்கடி போன்ற பிரச்சினைகளினால் கல்விச் செயற்பாடு களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)


**திருத்தம்**

**கேள்வி அறிவித்தல்**

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்**

**சபைநிதி வேலைத்திட்டம் 2022**

12.09.2022ம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. வேலை அட்டவணை இலக்கம் 16 இல் குறிப்பிடப்பட்ட வேலை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| இல | வேலை விபரம் ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 16 | திடற்புலம் மயானத்திற்கு அருகாமையில் உள்ள வீதியின் குறுக்கு வீதி, சுன்னாகம் புத்தூர் வீதியின் சந்திக்கு அருகாமையின் 2ம் குறுக்கு வீதி, ஈவினை பிள்ளையார் வீதி-மிகுதி வேலை குப்பிழான் கேணியடி விவசாய குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2022/34 | 1.903 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.11.2022 | 20,000.00 | 13.12.2022 |

க. தர்ஷன்,
தவிசாளர்,
பிரதேசசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
13.09.2022

(C-4899)



திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Srilanka**

வணிகமாணி பட்டப்படிப்பு 2019/2020 (வெளிவாரி)

**Bachelor of Commerce (Hons) Degree Programme- 2019/2020 (External)**

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2022**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை (வணிகப்பிரிவு) - 2019 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான தகைமையைக் கொண்டவர்கள்

**வணிக முதலாம் தேர்வில் இருந்து விலக்களிப்பு கோருதல்:**

- ஏற்கனவே வணிக முதலாம் அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகளில் சித்தியடைந்து விலக்களிப்பு கோருவோர் உரிய தகைமைகளை குறிப்பிட்டு விண்ணப்பிக்க முடியும்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

விண்ணப்பப்படிவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அல்லது

www.codl.jfn.ac.lk எனும் இணைய முகவரியில் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000 இனை 89006208000063 என்ற மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் செலுத்தி பற்றுச் சீட்டினை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து பிரதிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வணிகமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம் - 2019/2020"** என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 30.09.2022 (வெள்ளிக்கிழமை) (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

மேலதிக விபரங்களை 021222 3612 என்ற தொலைபேசி எண்ணூடாக அல்லது www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**திருநெல்வேலி.**

(C-4901)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 32 சூரி 2 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B Eng-Civil Engineering TO (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: படித்த தொழில் செய்யும் பெண்
தொ.இ: B/12931

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: சூரி 4 செவ் 10 இல்
உயரம்: 180 cm
தகைமை/தொழில்: HNDA பட்டதாரி (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/12932

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: பூராடம் 4
கி.பா: சூரி 3 செவ் 1 இல்
தகைமை/தொழில்: உயர்தரம்
எதிர்பார்ப்பு: பிரான்ஸ் அல்லது ஐரோப்பிய நாடுகள்
தொ.இ: B/12934

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம் : விருச்சிகம் 3
கி.பா: சூரி, செவ் 7 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில் முதுமாணி பொறியியலாளர் (லண்டன்)
எதிர்பார்ப்பு :படித்த பெண்
தொ.இ: B/12938

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: சூரி 1 செவ் 3 இல் உயரம்: 155 cm
தகைமை/தொழில்: A/L தையல்
எதிர்பார்ப்பு: தாரமிழந்தவர் வெளிநாடு விரும்பத்தக்கது
தொ.இ:G/12937

பிறப்பு: 2001 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: 17 சூரி 8 செவ் 10 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்: BSc, HND Engineering கற்றுக் கொண்டிருக்கிறார்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/12941

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
உயரம் : 157 cm
கி.பா: சூரி 6 செவ் 1 இல்
தகைமை/தொழில்: BA (Hons)MA அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் சைவபோசனம் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12944

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா:11 ¾ சூரி 8 செவ் 10 இல் உயரம்:5'4"
தகைமை/தொழில் : கல்வியற் கல்லூரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில் அல்லது வெளிநாடு
தொ.இ:G/12948

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மனிதப் பிசாசுகள்



(நேற்றைய தொடர்ச்சி)

நள்ளிரவு வந்தது. அப்போது சில மனிதர்கள் அந்த ஆலமரத்தடியே வந்தார்கள். அவர்கள் அப்பகுதியை நன்கு அறிந் தவர்கள் போலத் தென்பட்டனர். அவர்கள் ஐந்து பேர்களே. அவர்கள் ஓரிடத்தில் தீ மூட்டி அதில் குங்கிலியப் பொடியைப் போட்டார்கள். அது குப்பெனப் பற்றி எரிந்தது. சற்று நேரத்தில் அடங்கியது. அதற்குப்பின் அவர்கள் சமையல் செய்யலானார்கள்.

அப்போது அவர்களில் ஒருவன் நீண்ட கோலை எடுத்து அதில் வெள்ளைத் துணியைச் சுற்றி எடுத்து அப்படியும் இப்படியும் ஆட்டினான்.அப்போது வேறொருவன் நரி ஊளை இடுவது போல அவ்வப்போது கத்திக் கொண்டிருந்தான். இன்னொருவன் பயங்கரமாக உரக்கச் சிரித்தான். அதன்பின் அவர்கள் தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு அங்கு மிங்கும் ஓடினார்கள். இப்படியாக ஒரு மணி நேரம் கழிந்தது.

அப்போது இன்னமும் பத்து பேர்கள் வந்தார்கள். அவர்களது கைகளில் மூட்டைகள் இருந்தன. அவர்கள் ஒரு சிறு பாறையருகே போய் அதை நகர்த்தி விட்டு குழி தோண்டினார்கள். அந்த இடத்தில் பல மூட்டைகள் இருந்தன. அவற்றோடு தாம் கொண்டு வந்த மூட்டைகளையும் வைத்து மண்ணைப் போட்டு மூடி பாறையை நகர்த்தி முன்போல வைத்தார்கள். அதன் பிறகு சற்றுநேரம் இருந்து தீவெட்டிகளை எடுத்துக் கொண்டு ஓடியும் கத்தியும் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். விடிவதற்கு முன் அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். இவற்றை எல்லாம் மரத்தின் மீதிருந்தவாறே பார்த்திபன் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் சென்ற பின் அவன் மரத்திலிருந்து கீழே இறங்கித் தன் ஊருக்குச் சென்றான். அவனைக் கண்ட ஊரார் "நீ அடுத்த ஊருக்குப் போய் விடப் போவதாகச் சொன்னாயே ஆனால் ஏன் திரும்பி வந்து விட்டாய்?" என்று கேட்டார்கள்.


அவனும் "நான் எங்கும் போகவில்லை. அந்த பிசாசுகள் நடமாடும் இடத்தில் தான் இரவு முழுவதும் இருந்தேன். அவற்றையும் பார்த்தேன்" என்றான். "பிசாசுகளைப் பார்த்தாயா? அவை உன்னை உயிரோடு விட்டு விட்டனவா?" என்று அவர்கள் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

பார்த்திபனும் "அந்தப் பிசாசுகளும் பயப்படுபவையே நாம் அவற்றைக் கண்டு பயப்படுவது போல அவையும் நம்மைப் பார்த்து பயப்படுகின்றன.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கவுந்தி அடிகளின் மனோதத்துவம்




இதனால்தான் துறவிகள் இந்த இன்பங்களை ஒதுக்கி வைக்கிறார்கள். முற்பிறப்பின் காரணமாகத் துன்பத்தை அனுபவித்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

கவுந்தி அடிகள் என்ன சொன்னாலும் அதில் ஒரு செய்தி இருக்கும். ஆகவே மேலும் தெரிந்து கொள்கிற ஆர்வம் ஏற்பட்டது. கோவலனுக்கு. "யாரெல்லாம் அப்படி அனுபவித்தவர்கள்?" என்று கேட்டான்.

தந்தையின் சொல்லுக்கு அடிபணிந்து காட்டுக்குச் சென்று கடும் துன்பங்களை அனுபவித்த திருமாலின் அவதாரம் ராமன்.அவன் தனது முற்பிறப்பின் வினையால்தானே. அத்தனை துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது?

"சூதாட்டத்தால் நாட்டை இழந்து காட்டுக்குச் சென்ற நளன். தன் காதலி தமயந்தியை இருண்ட காட்டில் பிரிய நேர்ந்தது. அவர்கள் இருவரின் குற்றமும் இல்லையே? தீவினைதானே?

ராமனும் நளனும் முற்பிறப்பின் வினைகளால் மனைவியைப் பிரிய நேர்ந்தது. துன்பத்திலும் மனைவியுடன் சேர்ந்து இருக்கிற பாக்கியத்தைப் பெற்றிருக்கிற நீ எதற்காக வருத்தப்பட வேண்டும்?

கலங்காதே கோவலனே! தைரியமாகச் சென்று மாநகரை பார்த்து வா. தங்குவதற்கு ஒரு வீட்டையும் பார்த்துக் கொண்டுவா. கண்ணகியைப் பார்த்துக் கொள்வது எனக்கு எப்படிச் சிரமமாகும்? நீங்கள் இருவருமே என் பிள்ளைகள் போன்றவர்கள்.

தவறான செயல்களைச் செய்கிறவர்கள் அதிலிருந்து நீங்கினாலும் கூட மனத்தில் குற்ற உணர்வு மட்டும் இருந்து கொண்டே இருக்கும். அந்த உறுத்தல் நீங்கினாலொழிய அவர்களுக்கு நிம்மதியும் சந்தோஷமும் திரும்பாது.

வாழ்க்கையில் புதிய முயற்சி ஒன்றை ஆரம்பிக்கிறவன் முதலில் தன் மனத்தில் இருக்கும் கவலைகளைக் களைந்து விடவேண்டும். அப்போதுதான் தன்னுடைய கடமைகளில் முழுமையாக ஈடுபடமுடியும்.

ஆனால் கவலைகளை மனத்திலிருந்து அகற்றுவது அத்தனை சுலபம் இல்லையே. கிணற்றிலிருந்து நீர் இறைப்பது போல் அவற்றை நீக்கி விடமுடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

அதற்கும் ஒரு வழி உண்டு நிம்மதியையும் சந்தோஷத்தையும் கொண்டு மனத்தை நிறைத்தால் போதும் கவலைகள் தானாக மேலே ஏறி வழிந்து ஓடிவிடும்.

கவுந்தி அடிகளின் மனோதத்துவம் இது தான். கோவலன் விடயத்தில் அது மிக நன்றாக வேலை செய்தது.

போர்க்களத்தில் கையை இழந்து துன்பத்தில் இருக்கிற ஒரு வீரன் வலியைத் தாங்க முடியாமல் அலறுகிறான். ஆனால் பக்கத்திலேயே கழுத்து அறுபட்டுக் கிடக்கும் பிணங்களைப் பார்க்கிறபோது அவனுக்குள் ஒரு நம்பிக்கை பிறக்கிறதில்லையா? அது போலத்தான் கவுந்தி அடிகளின் உத்தியும்.

கோவலனை நளனுடனும் ராமனுடனும் ஒப்பிட்டதும் அவர்களைக் காட்டிலும் நீ கொடுத்துவைத்தவன் என்று சொன்னதும் மந்திரம் போட்டதுபோல கோவலனின் மனத்தைத் துடைத்துத் தயார்ப்படுத்தியது.

அவனுக்குள் இருந்த குற்ற உணர்வு விலகியது. உற்சாகமாகத் தனது புதிய வேலையில் இறங்கினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்!.

– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் பாரம்பரிய விவசாய உற்பத்திகள் எங்கே போயின?

எங்கள் நாட்டுக்கும் எங்கள் பிரதேசத்துக்கும் உரித்தான பாரம்பரிய விவசாய உற்பத்திகளை நாம் மெல்ல மெல்ல இழந்து விட்டோம்.

ஆம், எங்கள் மூதாதையர்கள் தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்த மரக்கறி வகைகளில் தக்காளி இனத்தை இப்போது காணமுடியவில்லை.

இதேபோல் கத்தரி, வெண்டி, பூசணி, பச்சை மிளகாய், புடோல், பாகை என எமக்குரித்தான மரக்கறி வகைகளை இழந்து இப்போது அதிசுவடிய உற்பத்தி என்ற பேரில், வியாபார மயப்படுத்தப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் மரக்கறி வகைகளுடன் மல்லுக்கட்டுகின்றோம்.

உண்மை, முன்பு எங்கள் தோட்டத்தில் விளைந்த கத்தரிக்காயில் இரண்டை வித்துக்கென விடுகின்ற நடைமுறையும் நம் தோட்டத்தில் காய்த்த சர்க்கரைப் பூசணியில் இருந்து எடுத்த விதையும் பாகற்காய் முற்றிப் பழுத்து வெடித்து அதன் உள்ளிருக்கும் கொவ்வைப் பழ நிறத்துப் பாகை விதையை எடுத்து சாம்பல் பூசி வெயிலில் காய வைத்து அடுத்த மரக்கறிச் செய்கைக்குத் தயார் செய்த காலமும் மலையேறிப் போயிற்று.

இதைவிட, தேவலோகத்து அமிர்தம் போன்ற எங்கள் ஊர்ப் பப்பாசியை இழந்து; தறுக்கணித்த காயும் பழமுமாய் கலந்த விதையில்லாப் பப்பாசியை பழமென உண்டு வாழுகின்ற பரிதாபத்தை என்னென்று சொல்வது.

அந்தோ! ஊர்க்கோழியை இழந்து ஊர் மாட்டைப் பறிகொடுத்து கோழிக்கும் மாட்டுக்கும் கடையில் வாங்கித் தீவனம் போடும் காலமாயிற்று இது.

ஊரெல்லாம் திரிந்து மூலிகையெல்லாம் உண்டு வீடு தேடி வந்து பசும்பால் தந்த ஊர்ப் பசுக்கள் இல்லாது போயின.

கொடியை, செடியை, நெல்லை, எள்ளை, குரக்கனைக் கொத்தித் தின்று செம்மஞ்சள் கருவோடு முட்டை தந்த ஊர்க்கோழிகள் எல்லாம் வெளிநாட்டு இனச் சேவலுடன் கலந்து அடையும் இல்லை, ஆன முட்டையும் இல்லை என்பதாய் நிலைமை ஆக,

பத்துக் கிராம் மிளகாய் விதையை இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கும் கொடுமையை ஆரெடுத்து உரைப்பார்.

ஐயனே! தூள் அரைக்கத் துப்புரவு செய்த எங்கள் ஊர்ச் செத்தல் மிளகாயை சுளகு கொண்டு புடைத்து அதில் கிடைத்த விதையை எடுத்து நாற்றுமேடை போட்டு மிளகாய் கன்று வைத்து பச்சை மிளகாய் விற்று வீடு கட்டிய நம் இனம் இன்று கடை ஏறித் திரிகிறது ரின்னில் அடைத்த மரக்கறி விதையை வாங்குவதற்கு,

என்ன மக்காள், செய்வம். உயர் விளைச்சல் என்ற பேரில் மரக்கறி விதை வியாபாரம் ஓஹோ என்றாயிற்று.

ஆம், விவசாயப் பெருமக்களே! விதையில்லா மரக்கறிகளுக்கு முடிவு கட்டி எங்கள் பாரம்பரிய இனத்தைத் தேடி எடுத்து அதனை எங்கள் தேசத்துச் சொத்தாக ஆக்கினால், எங்கள் மண் ஏற்றம் பெறும். இது சத்தியம்.

# திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் 15ஆம் திகதி நல்லூரில் வழமைபோல் நடைபெறும்

### நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் உரிமைகளுக்காக 15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி ஈகச்சாவைத் தழுவிக் கொண்ட தியாக தீபம் திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வழமைபோல் இம்முறையும் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நாளை மறுதினம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு 26ஆம் திகதி திங்கட்கிழமை வரையான 12 நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

15 ஆம் திகதி வியாழக்கிழமை நினைவேந்தல் ஆரம்ப நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தியாக தீபம் திலீபன் உண்ணாவிரத மேடையில் அமர்ந்த நேரமாகிய காலை 9.45 மணியளவில் திலீபனின் உருவப் படம் பண்டிதரின் தாயாரினால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும். இதில் முதன்மைச் சுடரினைப் பண்டிதரின் தாயார் ஏற்றி வைப்பார்.

தினமும் காலை 9 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும். நினைவேந்தல் நிகழ்வுகளின்போது ஒவ்வொரு நாளும் முதன்மைச் சுடரினை மாவீரச் செல்வங்களின் பெற்றோர்கள் ஏற்றி வைப்பதற்கு ஏற்றவகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகளை அடுத்து இரத்த தான நிகழ்வு நடைபெறும்

இதேவேளை, தியாக தீபம் திலீபன் ஈகச் சாவினைத் தழுவிக் கொண்ட நாளாகிய 26ஆம் திகதி திங்கட்கிழமைக்கான நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும். அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டுத் தியாக தீபம் திலீபன் நிகழ்வுகளில் பங்கேற்போம் எனவும் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-18,104)

## விழிப்புணர்வுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான போசனையை மேம்படுத்தும் நோக்கில் கைதடி சித்த போதனா மருத்துவமனையும் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் குழந்தை மருத்துவ பிரிவும் இணைந்து நடத்தும் வளரும் சிறார்களுக்கான மந்த போசாக்கு விழிப்புணர்வுத் திட்டம் 14.09.2022 அன்று காலை 08.30-12.30 வரை கைதடி மேற்கு பராசக்தி குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம)

## இராஜாங்க அமைச்சரானார் பிரேமலால் ஜயசேகர

(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சராக பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (நி)

## எதிர்வரும் நாட்கள் 1 மணி நேர மின்வெட்டு

(கொழும்பு)

இன்று 13ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை ஒரு மணிநேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி A, B, C, D, E, F, G, H, I, J, K, L, P, Q, R, S, T, U, V, W ஆகிய வலயங்களுக்கு மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை ஒரு மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ம)

## கோவிட் தொற்று 3 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 3 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

உயிரிழந்த நபர்களில் 60 வயதுக்கு மேற்பட்ட 2 ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டில் மேலும் 27 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 670,471ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இரும்பு வியாபாரிகள் எனக் கூறி வீட்டில் இருந்த பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

இரும்பு வியாபாரிகள் எனக் கூறி வீடு புகுந்து பெறுமதி மிக்க பொருட்களை திருடிக்கொண்டு சென்ற சம்பவம் ஒன்று வடமராட்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் வடமராட்சி கரணவாய் பகுதியில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இதன்போது 7 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் மூவரை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

மூவரையும் விசாரித்த நீதிவான் அவர்களை பிணையில் செல்ல உத்தர விட்டார். (4-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை [illegible] [illegible] தில் மகாறம்பைக்குளம், ஆகிய இடங்களிலும் **யாழ்.பிரதேசத்தில்** அம்பன், அம்பன் மருத்துவமனை, குடத்தனை, குடத்தனை நீர் வழங்கல், மணற்காடு, நடுக்குடத்தனை, பொற்பதி [illegible] ஆகிய [illegible] இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 50 கிலோ மாட்டிறைச்சியுடன் இருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

யாழ். புங்குடுதீவில் வடக்குப் பகுதியில் களவாடப்பட்டு வெட்டப்பட்ட 50 கிலோ கிராம் நிறை உடைய மாட்டு இறைச்சியினை பயணப்பையில் வைத்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு வாழ்மக்கள் வழங்கிய இரகசிய தகவலை அடுத்து மண்டைதீவு பொலிஸ் சோதனை சாவடியில் வைத்து பொலிஸார் சந்தேக நபர் இருவரையும் கைதுசெய்துள்ளதுடன் இறைச்சியினை பறிமுதல் செய்துள்ளனர்.

இதன்போது தீவகத்தின் புங்குடுதீவைச் சேர்ந்த ஒருவரும் சரவணையைச் சேர்ந்த இன்னொருவரும் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பாக மேலதிக விசாரணையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 73

2001 உக்ரைனிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 68.8% க்கும் அதிகமான மக்கள் தங்களை ரஷ்ய மொழி பேசுபவர்களாகக் கருதுகின்றனர். அதேநேரத்தில் 30.0% பேர் தங்களை உக்ரைனிய மொழி பேசுபவர்களாக கருதுகின்றனர். பிராந்தியத்தின் தெற்குப் பகுதியிலும் லுகான்ஸ்க் நகரைச் சுற்றிலும் ரஷ்யமக்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அதேசமயம் வடக்குப் பகுதி மக்கள்தொகை குறைவாக உள்ளது. அங்கு பெரும்பாலும் விவசாயம் செய்பவர்கள் உள்ளனர். அவர்கள் உக்ரைன் மக்களாவர்.




**2014 இல் டான்பாஸில் நடந்த போரினால் லுஹான்ஸ்க் மாநிலத்தின் ஒரு பகுதி ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.**

இதுபற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

### தோனேஸ்க் மாநிலம்

இதன் பரப்பளவு 26.517 சதுர கி.மீ. மக்கள் தொகை 4.6229 மில்லியன் ஆகும்.

தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) மாநிலம் நிறுவப்படுவதற்கு முன்பு அதன் எல்லையில் 1923 முதல் 1930 வரை மூன்று பிராந்தியங்கள் இருந்தன. டொனெட்ஸ் கவர்னரேட் 1925 இல் இல்லாமல் ஆக்கப்பட்டது. சோவியத் உக்ரைனின் ஒரு பகுதியாக கார்கிவ் மாகாணத்தில் இருந்து 2 ஜூலை 1932 அன்று தோனெட்சியன் மாநிலம் நிறுவப்பட்டது. 1938 வரை தோனெட்சியன் மாநிலம் தற்போதைய தோனேஸ்க் மாநிலம் மற்றும் லுகான்ஸ்க் பிராந்தியத்தின் பிரதேசங்களை உள்ளடக்கி இருந்தது. ஜூன் 1938 இல் இது ஸ்டாலினோ மாநிலம் (தற்போதைய தோனேஸ்க் மாநிலம்) மற்றும் வோரோஷிலோவ்ஹ்ராட் மாநிலம் தற்போதைய லுகான்ஸ்க் மாநிலம் எனப் பிரிக்கப்பட்டது.

**தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) மாநிலம் அதிக மக்கள்தொகை கொண்ட பிரதேசமாகும். அதன் நிர்வாக மையம் தோனேஸ்க் (டோனெட்ஸ்க்) நகரம் ஆகும். இருப்பினும் தோனேஸ்கில் நிலவும் பிரிவினைவாத நெருக்கடியின் காரணமாக அதன் பிராந்திய மாநில நிர்வாகம் தற்காலிகமாக கிராமடோர்ஸ்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

1941-1943 காலகட்டத்தில் நாஜி ஜேர்மன் ஆக்கிரமிப்பின் போது, தோனேஸ்க் மாநிலம் யுசிவ்கா மாநிலம் என்று அறியப்பட்டது. 1953 இல் நீண்டகால சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலினின் மரணத்தைத் தொடர்ந்து நிகிதா குருஷ்சேவ் பதவியேற்ற பிறகு சோவியத் யூனியனில் தொடர்ச்சியான அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒரு பகுதியாக, 1961 இல் ஸ்டாலினோ மற்றும் ஸ்டாலினோ பிராந்தியம் முறையே தோனேஸ்க் மற்றும் தோனேஸ்க் மாநிலம் என மறுபெயரிடப்பட்டது.

**7 ஏப்ரல் 2014 அன்று உக்ரைனின் கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து, தோனேஸ்க் மாநிலத்தின் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய ஆதரவு போராளிகள் உக்ரைனிலிருந்து பிரித்து தோனேஸ்க் மாநிலத்திற்கு சுதந்திரம் அறிவித்தனர்.**

மற்றும் 11 மே 2014 அன்று உக்ரைனிலிருந்து அம் மாநிலம் பிரிவதற்கு அங்கீகரிக்கப்படாத வாக்கெடுப்பை நடத்தினர். அதைத் தொடர்ந்து, டான்பாஸில் போர் தொடங்கியது.

தோனேஸ்க் கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்த பிறகு, தோனேஸ்க் மாநில நிர்வாகம் மரியுபோலுக்கும் பின்னர் கிராம டோர்ஸ்க்கும் இடமாற்றம் செய்யப்பட்டது.




(தொடரும்)

# உக்ரைனின் முக்கிய நகரங்களில் இருந்து பின்வாங்கும் ரஷ்யப்படைகள்

(கீவ்)

**உக்ரைனியப் படைகளின் விரைவான முன்னேற்றத்தை அடுத்து வடகிழக்கு உக்ரைனில் இருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கியுள்ளன.**



ரஷ்யப் படைகளுக்கான முக்கிய விநியோக பகுதியான குபியன்ஸ்கில் கடந்த சனிக்கிழமை தமது படையினர் நுழைந்ததாக உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் வெடிமருந்து கையிருப்பு மற்றும் உபகரணங்களை அவர்கள் தப்பி ஓடும் போது கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருப்புக்களை அங்கிருந்து இருந்து வெளியேறவும், வேறு இடங்களில் நடவடிக்கைகளை வலுப்படுத்தவும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

டொனெட்ஸ்க் போர்முனையில் முயற்சிகளை வலுப்படுத்த மூன்றாவது முக்கிய நகரமான பலாக்லியாவிலிருந்து துருப்புக்கள் திரும்பப் பெறப்பட்டதையும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியது.

சமீபத்திய முன்னேற்றங்களும் மேற்கத்தேய ஆயுதங்கள் மூலம் போரை விரைவாக முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பதை இது காட்டுவதாக உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். (4)

# மகாராணியின் உடல் ஹொலிரூட் அரண்மனையில்

## அஞ்சலி செலுத்த திரண்ட மக்கள்



(லண்டன்)

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் உடல், அரச இல்லமான ஹொலிரூட் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ளது.

அரச குடும்பத்தார் இறுதி மரியாதை செலுத்துவதற்காக குறித்த அரண்மனையில் அவரது உடல் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் அரண்மனையில் இருந்து கொண்டு வரப்பட்ட மகாராணியின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சாலையின் இரு புறங்களிலும் திரண்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்து மகாராணியின் உடல் எடின்பரோவில் உள்ள செயிண்ட் கில்ஸ் தேவாலயத்தில் வைக்கப்படும்.

அங்கு பொது மக்கள் மகாராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பளிக்கப்படும்.

அதன்பிறகு, பிரித்தானிய இராணுவத்துக்கு சொந்தமான விமானம் மூலம் உடல் லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்படும்.

அதற்கு மகாராணியின் மகள் இளவரசி ஆன் தலைமை தாங்கவுள்ளார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் எபேயில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

நேற்றைய கூட்டத்தொடரில் இலங்கை தனது ஆணையை நிறைவேற்ற கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென துருக்கி தெரிவித்துள்ளது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் இலங்கை ஜனநாயக ஒழுங்கை ஏற்படுத்தியுள்ளமைக்கு உகண்டா பாராட்டு தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடுகளை அடிப்படையாக கொண்ட பொறிமுறைகளை ஆதரிக்கவில்லை என பெலாரஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்ட தீர்மானங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுபவை என பெலாரஸ் தெரிவித்துள்ளது.

அதேவேளை நாடுகளை அடிப்படையாக கொண்ட தீர்மானங்கள் ஐ.நா சாசனத்தின் அடிப்படையை மீறுபவையென புருண்டி தெரிவித்துள்ளது.

கடந்த தீர்மானம் குறிப்பிட்ட நாட்டின் ஆதரவுடன் நிறைவேற்றப்படாததால் அது பயனுள்ளதாக அமையவில்லை என சிம்பாப்வே தெரிவித்துள்ளது.

மனித உரிமைகளிற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதாக தெரிவித்துள்ள வியட்நாம், இழப்பீடு மற்றும் நிலங்கள் விடுவிப்பது குறித்த இலங்கையின் தேசிய முயற்சிகளை அங்கீகரிப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில், இலங்கையில் காணப்படும் மனித உரிமை நிலைவரத்தை பெரிதுபடுத்தும் எண்ணமில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு தனது தளர்ச்சியற்ற ஆதரவை வெளியிட்டுள்ள பாகிஸ்தான், இலங்கை முன்னெடுத்துள்ள உள்நாட்டு முயற்சிகளை மனித உரிமை பேரவை அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம)

## இலங்கை நிலை...

டின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களுக்கு தற்போதைய நெருக்கடியானது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளது.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் பயன்பாடு உட்பட, போராட்டக்காரர்கள் மீதான சமீபத்திய நடவடிக்கை குறித்து நியூசிலாந்து கவலை வெளியிட்டுள்ளது.

மேலும் பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் முக்கியமானவை என்றும் நியூசிலாந்து மீண்டும் வலியுறுத்தியது.

அத்தோடு இலங்கையின் நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலை அமுல்படுத்துவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதேவேளை 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான பிரச்சினைகளில் முன்னேற்றம் இல்லாதது குறித்து பிரித்தானியா கவலை வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு பொறுப்புக்கூறல் செயன்முறைகள் நடைபெறாதமை காரணமாக இலங்கையில் சாட்சியங்களை சேகரிக்கும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் பணி தொடர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

அதேநேரம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் முழுமையாக ஒத்துழைப்பை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும் என பிரான்ஸ் கேட்டுக்கொண்டுள்ளது.

குறிப்பாக, இலங்கை அரசாங்கம் தனது நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது. (ம)

## இலங்கைக்கு...

தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தக் கூடிய [illegible] குறித்து இதில் [illegible] தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடத் தூதுக்குழுப் பணிப்பாளர் சென் சென், பிரதிப் பணிப்பாளர் உத்சவ் குமார் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம)

## 13ஆவது திருத்...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொரண்டிருக்கின்றது. இந்த முதல் நாள் அமர்வில் பேசிய இந்திய பிரதிநிதியே இவ்வாறு வலியுறுத்தல் விடுத்துள்ளார்.

தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கான அர்ப்பணிப்பில் இலங்கை அரசாங்கத்தினால் அளவிடக்கூடிய முன்னேற்றம் எதுவும் ஏற்படாமை குறித்து இந்தியா, ஜெனிவாவில் கவலை தெரிவித்தது.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும், மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்கவும், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவும் இந்தியா அழைப்பு விடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான இந்தியாவின் பிரதி நிதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இலங்கையின் கட்டமைப் பிற்குள் அரசியல் தீர்வை ஏற்படுத்தி, அங்கு வாழும் தமிழர்களுக்கு நீதி, சமாதானம், சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வது தமது நிலையான பார்வை என்றும் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியானது கடனினால் இயங்கும் பொருளாதாரத்தின் வரம்புகளையும் அது வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் நிரூபித்துள்ளதாக இந்திய பிரதிநிதி சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

## பயங்...

டத்தை இடைநிறுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிடம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நேற்று உரையாற்றிய ஐரோப்பிய ஒன்றிய பிரதி நிதிகள், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற பலாத்காரத்தைப் பயன்படுத்துவதைக் கண்டித்துள்ளனர்.

அத்துடன் தூதுக்குழுவினர் பொறுப்புக்கூறல் மற்றும் தண்டனையின்மையில் இருந்து விடுபடுவதற்கான உடனடி நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு அழைப்பு விடுத்தது.

அதேநேரம் இலங்கை தொடர்பான அறிக்கைக்காக, மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது நன்றியைத் தெரிவித்தது.

அத்துடன் இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான தங்கள் உறுதிப்பாட்டையும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்படக்கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சூழ்நிலைகளில் உள்ள நபர்கள் மற்றும் குழுக்கள் மற்றும் அனைவரின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளை திறம்பட மற்றும் சமமாக நிறைவேற்றுவதற்கான அவசியத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)


தன நிதானய
திகதி - 2022.09.12
சீட்டிழுப்பு இலக்கம் - 906
W 02 63 70 76

மஹஜன சம்பத
திகதி 2022/09/12
சீட்டிழுப்பு இலக்கம் 4876
L 6 0 4 1 7 9

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 185
மகரம் 04 33 57 62 மகரம்

மெகா பவர்
திகதி 12/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1224
X 24 07 46 50 69

கொவிசெத
திகதி 2022.09.12
சீட்டிழுப்பு இலக்கம் 3118
G 12 15 62 68

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1331
துலாம் 9 7 5 6 8 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1851
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022.09.12
தினம் திங்கட்கிழமை
R 11 12 15 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,357,380/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.12
சீட்டிழுப்பு இல : 4012
வர்ணம் : நீலம்
ரூ. 4,264,540/-
09 26 55 60 S

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,869,463.40
திகதி 2022-09-12
வெற்றி வாரம் 3563
வர்ணம் மஞ்சள்
05 21 22 36 மகரம்
ரூ. 8,168,880/-

U 23 26 31 68 77
சீட்டிழுப்பு வாரம் 1027
இள நீலம்
2022.09.12 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 260,141,515/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1852
சீட்டிழுப்பு திகதி 2022-09-12
11 13 33 39 W
ரூ. 35,351,448/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1677
சீட்டிழுப்பு திகதி : 2022.09.12
ரூ. 3,457,440/-
08 14 19 60 L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நல்லூர், கோப்பாய், சாவகச்சேரியில் தொழில் தேடுவோரைப் பதிவுசெய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலகமானது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள தொழில் தேடுவோர் மற்றும் புதிதாக சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வம் கொண்டிருப்பவர்களைப் பதிவு செய்யவிருக்கின்றது.

இதன் ஆரம்பக் கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள அனைத்து கிராமசேவையாளர் பிரிவுகளூடாகவும் இப்பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை தங்கள் கிராம சேவையாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்தி எதிர்வரும் 20.09.2022 செவ்வாய்க் கிழமை அன்று அல்லது அதற்கு முன்பதாக கிராம சேவையாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கமுடியும்.

(ம)


## கல்லீரல் தேவை

58 வயதுடைய ஒருவருக்கு கல்லீரல் அவசரமாகத் தேவைப்படுகின்றது.

20 - 45 வயதுக்குட்பட்ட B+ அல்லது O+ இரத்தவகையைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

தயவுசெய்து ஒரு நபரின் உயிரைக் காப்பாற்ற உதவுமாறு வேண்டுகின்றோம்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- K. வரதன் 077 757 0103 (12767)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12770)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1 km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

தொடர்புகளுக்கு:- 076 755 8606, 077 911 6983

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 90 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1½ Km தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1½ Km தூரத்தில்
- புத்தூர் சந்தியில் இருந்து (பருத்தித்துறை வீதி) மட்டுவில் செல்லும் பிரதான வீதியில் (காபற் வீதி) இருந்து இரண்டாவது காணி
- 775 இலக்க போக்குவரத்து பேருந்துகள் செல்லும் காபற் வீதி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்வதற்கும் வீடுகள் அமைப்பதற்கும் உகந்த காணி
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12761)

077 658 5999, 076 436 5814, 077 874 8135

## வேலைவாய்ப்பு

யாழ்.நெல்லியடியில் இயங்கிவரும் முன்னணி நிதி நிறுவனம் (Finance Company) ஒன்றுக்கு வேலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

A/L மூன்று பாடங்களில் சித்தி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-

077 590 1623,
077 803 9320

(12767)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension

இலங்கை விசா நீடித்து தரப்படும்

(C-4881)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா

அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4881)

!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம் குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.

எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்

V2 TRAVELS 0768226244 0768226240

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4881)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திரு. சண்முகம் சதீஸ்குமார்

(சீதா ஜுவல்லறி உரிமையாளர்)

திதி : திருதியை



ஓராண்டு ஓடி மறைந்தது ஐயா!
உங்கள் அன்பு நிறைந்த முகம்
எம் நெஞ்சங்களில் விட்டகலவில்லை!

அன்பென்ற வார்த்தைக்கு
அர்த்தம் தேடினால் அது நீங்களே!

புன்னகை கலந்த உங்கள் அன்பு முகத்தை
இனி எப்போது காண்போம்?

ஓராண்டென்ன?
ஓராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்கள் எம் நெஞ்சங்களில்
நிலையாய் வாழ்வீர்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

மண்ணில் : 1974.11.25
விண்ணில் : 2021.08.25

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (12768)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.